RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-344 | 10 டிசம்பர் | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## சோனியா காந்தி பிறந்தநாள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, டிச.10

நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி பிறந்தநாளை ஒட்டி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக முதல்வர் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில், "பெரும் சவால்களை எதிர்கொண்டு முன்னேறி, மேன்மைப்பண்பு கொண்ட தலைவராகத் தொடர்வது என அவரது வாழ்க் கைப் பயணம் அவரது போராட் டக் குணத்துக்கும் அர்ப்பணிப் புக்கும் சான்றாகத் திகழ்கிறது. வெற்றியும் அமைதியும் நிறைந்து நீண்டகாலம் அவர் நல்ல உடல்நலத்துடன் திகழ விழைகிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முடிவைக் கைவிடுவது குறித்து மத்திய அமைச்சர் பரிசீலனை: அண்ணாமலை தகவல்

சென்னை, டிச.10

மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முடிவைக் கைவிடுவது குறித்து மத்திய அமைச்சர் பரிசீலனை செய்வதாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித் துள்ளார்.



நேற்று தொடங்கியுள்ள தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடரில், மதுரை மாவட்டத் தில் மாநில அரசின் அனுமதி பெறாமல் மத்திய அரசால் டங்ஸ்டன் சுரங்க உரிமம் வழங்கப்பட்டதை ரத்து செய்ய வலியுறுத்தி அரசினர் தனி தீர்மானத்தை முதல்வர் ஸ்டாலின் கொண்டு வருவார் என்று எதிர்பார்க்கப்படும் சூழலில் அண்ணாமலையில் இந்த ட்வீட் கவனம் பெறுகிறது.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "திமுக அரசின் தவறான, முழுமை யற்ற தகவல்களால், மதுரை அரிட்டாபட்டி, நாயக்கர் பட்டி யில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க, பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் சூழல் உருவாகியுள்ளது.

இது தொடர்பாக, மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டிக்கு கடிதம் எழுதியதோடு மட்டுமல் லாமல், மதுரை அரிட்டா பட்டி, நாயக்கர்பட்டி, கவட்டை யம்பட்டி, எட்டிமங்கலம், ஏ.வல்லாளப்பட்டி, அரிட்டா பட்டி, கிடாரிப்பட்டி, நரசிங்கம் பட்டி உள்ளிட்ட கிராமங்கள் உள்ள பகுதிகளில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க, பொது மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பது குறித்து, தொலைபேசியிலும் அழைத்து, டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முடிவைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி, டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முடிவைக் கைவிடுவதைக் குறித்துப் பரிசீலிக்கிறேன் என்று உறுதி அளித்துள்ளார்.

மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பது குறித்து திமுக அரசு தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் மட்டுமே, இந்தச் சுரங்கம் அமைப்பது குறித்த பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது, பொதுமக்கள் எதிர்ப்பை அடுத்து, திமுக அரசு நாடகமாடிக் கொண்டி ருக்கிறது.

பிரதமர் மோடி நல்லாட்சி யில், விவசாயிகள் நலனுக் கான திட்டங்கள் மட்டுமே செயல்படுத்தப்பட்டி ருக்கின் றன. விவசாயிகள் நலனுக்கு எதிரான எந்தச் செயல்பாடு களையும், நமது பிரதமர் மேற் கொள்ள மாட்டார் என்பது உறுதி." எனக் குறிப்பிட்டுள் ளார்.

## டெல்லியில் 40 பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் போலீஸ் தீவிர சோதனை

புதுடெல்லி, டிச.10

தலைநகர் தலைநகர் டெல்லியில் 40 பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக் கப்பட்டது. இதனையடுத்து மாணவர்களை வீட் டுக்கு அனுப்பிவிட்டு பள்ளி களில் போலீஸார் தீவிர சோத னையில் ஈடுபட்டுள்ளனர். மதர் மேரி, கேம்ப்ரிட்ஜ் பப்ளிக் பள்ளி, பிரிட்டிஷ் பள்ளி, சல்வான் பப்ளிக் பள்ளி உள்பட 40 பள்ளிகளில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.




'30 ஆயிரம் அமெரிக்க டாலர் வேண்டும்' மிரட்டல் மின்னஞ் சல் scottielanza@gmail.com என்ற முகவரியில் இருந்து அனுப்பப்பட்டுள்ளது. அதை அனுப்பிய நபர், நான் பள்ளி வளாகங்களின் உள்ளே பல இடங்களில் வெடிகுண்டுகளை மறைத்து வைத்துள்ளேன். அவையெல்லாம் மிகச் சிறிய அளவிலானவை. அவற்றால் கட்டிடங்களுக்கு பெரிய பாதிப்பு ஏற்படாது. ஆனால், வெடிகுண்டுகள் வெடித் தால் நிறைய பேர் காயமடை வார்கள்" என்று குறிப்பிட்டுள் ளார். மேலும் அந்த நபர் தனக்கு 30 ஆயிரம் அமெரிக்க டாலர் வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

தொடரும் மிரட்டல்கள்: முன் னதாக கடந்த வாரம் டெல்லி ரோஹிணி பகுதியில் உள்ள வெங்கடேஸ்வரா குளோபல் பள்ளிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. சோத னையில் அந்த மிரட்டல் போலியானது என்று தெரிய வந்தது. அதற்கும் முன்னதாக டெல்லி பிரசாந்த் விஹார் பகுதியில் பள்ளிக்கூடம் அமைந்த பகுதியிலிருந்து 1 கிமீ சுற்றுவட்டாரத்துக்குள் குறைந்த சக்தி கொண்ட மர்மப் பொருள் ஒன்று வெடித்தது. இதுபோல் ஒவ்வொரு முறை யும் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்படும் போது அது குறித்து பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் உடனடியாக வந்து குழந்தைகளை அழைத்துச் செல்லச் செய்யப்படுகின்றனர். இது பெற்றோர்கள் மத்தி யில் ஆழ்ந்த அச்சத்தையும், சோர்வையும் ஏற்படுத்தி யுள்ளது.

இரண்டு மாதங்களுக்கும் முன்னர் டெல்லியில் உள்ள அனைத்து சிஆர்பிஎஃப் பள்ளிகளுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. கடந்த நவம்பர் 19 ஆம் தேதி ஆம் ஆத்மி அரசும் டெல்லி காவல்துறையும் இணைந்து வெடிகுண்டு மிரட்டல்களைக் கையாள்வது தொடர்பாக விரிவான நிலையான செயல் பாட்டு வழிமுறையை வகுத் தது என்பது குறிப்பிடத்தக்கது.

எச்சரித்த மத்திய அரசு: நாடு முழுவதுமே பள்ளி, கல்லூரிகள், விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் அவ்வப்போது விடுக்கப்படுவது தொடர்கதையாக இருக்கிறது. முன்னதாக, கடந்த சில நாட்க ளாக உள்நாட்டு மற்றும் சர்வ தேச விமானங்களுக்கு புரளி யாக வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டது. இவ்விவகாரத் தில், அதனைக் கையாண்ட முறைக்காக எக்ஸ், மெட்டா தளங்களை கடுமை யாக சாடிய மத்திய அரசு, 'சமூக வலைதளங்கள் குற்றத்தைத் தூண்டுகிறது' என்றும் விமர் சித்தது நினைவுகூரத் தக்கது.

## தமிழ்நாடு சட்டப் பேரவை 2 நாள் கூட்டம் டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம்!

சென்னை, டிச.10

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத் தொடர் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்குகிறது. இந்த கூட்டத் தொடரில் டங்ஸ்டன் சுரங்க உரிமையை ரத்து செய்வது தொடர்பான அரசினர் தனி தீர்மானத்தை முதல்வர் ஸ்டாலின் கொண்டு வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



தமிழக சட்டமன்றத்தில், துறை வாரியாக மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் கடந்த ஜூன் 20 முதல் 29ஆம் தேதி வரை 10 நாட்கள் நடத்தப்பட்டது.

இந்நிலையில், சட்டப் பேரவை டிசம்பர் 9ஆம் தேதி (இன்று) கூடும் என்று சபாநாயகர் அப்பாவு கடந்த நவம்பர் 25ஆம் தேதி அறி வித்தார். அலுவல் ஆய்வுக்குழ கூட்டம் நடத்தி எத்தனை நாள்கள் அவை நடைபெறும் என்பது அறிவிக்கப்படும் என்று கூறியிருந்தார்.

அந்த வகையில் டிசம்பர் 2ஆம் தேதி அலுவல் ஆய்வு குழு கூட்டம் நடைபெற்றது. அதில் சட்டமன்ற கூட்டத்தை டிசம்பர் 9, 10 (இன்றும், நாளையும்) என இரண்டு நாட்கள் நடத்துவது என முடி வெடுக்கப்பட்டது.

அதன்படி, சட்டமன்ற கூட்டத் தொடர் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்குகிறது. முதலில், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் கள் மறைவுக்கு இரங்கல் குறிப்பை சபாநாயகர் அப்பாவு வாசிப்பார். அதன்பின், முக்கிய பிரமுகர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

அதைத் தொடர்ந்து, கூடுதல் செலவினங்களுக்கான மானிய கோரிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்ய உள்ளார்.

பின்னர் மதுரை மாவட் டத்தில் மாநில அரசின் அனுமதி பெறாமல் மத்திய அரசால் டங்ஸ்டன் சுரங்க உரிமம் வழங்கப்பட்டதை ரத்து செய்ய வலியுறுத்தி அரசினர் தனி தீர்மானத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வருகிறார். இந்த தீர்மானத் தின்மீது சட்டப்பேரவை கட்சி தலைவர்கள் பேசிய பிறகு, தீர்மானம் நிறைவேற்றப்படும்.

## தலைநகர் டமாஸ்கஸை கிளர்ச்சி படை கைப்பற்றியது சிரியா அதிபர் ஆசாத் வெளிநாட்டுக்கு தப்பி ஓட்டம் நடந்தது என்ன?

டமாஸ்கஸ், டிச.10

மத்திய கிழக்கு நாடான சிரியாவை எச்டிஎஸ் கிளர்ச்சி படை கைப்பற்றியது. நாட்டில் பதற்றம் அதிகரித்ததால், அதிபர் ஆசாத் வெளிநாட்டுக்கு தப்பியோடிவிட்டார்.



மத்திய கிழக்கு நாடான சிரியாவில் கடந்த 1971ல் ராணுவ மூத்த தளபதியாக இருந்த ஹபீஸ் அல் ஆசாத் ராணுவ புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றினார். 29 ஆண்டுகள் சிரியா அதிபராக இருந்த அவர் 2000ம் ஆண்டில் காலமானார். அவரது மகன் பஷார் அல் ஆசாத் கடந்த 2000 ஜூலை 17ம் தேதி அதிபரானார். அவர் ஷியா பிரிவை சேர்ந்தவர் என்பதால், அவருக்கு எதிராக சன்னி முஸ்லிம்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

அதிபர் ஆசாத்துக்கு ஈரான், ரஷ்யா ஆதரவு அளித்தன. கிளர்ச்சி படைகளுக்கு துருக்கி, அமெரிக்கா ஆதரவு அளித்தன. கடந்த 2014 ல் சன்னி பிரிவை சேர்ந்த ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத குழு சிரியாவின் பெரும் பகுதியை கைப்பற்றியது. அதிபர் ஆசாத் படைகள் கிளர்ச்சி படைகள் இடையிலான போர் பல ஆண்டுகள் நீடித்தது. இதில் சுமார் 3 லட்சம் பேர் உயிரிழந்தனர்.

பின்னர், ரஷ்யா, ஈரானின் ஆதரவால் அதிபர் ஆசாத்தின் கை ஓங்கி, ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் பிடியில் இருந்த பகுதிகள் மீட்கப் பட்டன. இந்த சூழலில் ரஷ்யா உக்ரைன் போரை தொடர்ந்து, சிரியா அதிபர் ஆசாத்தின் ராணுவத்துக்கு ரஷ்யா, ஈரானின் ஆதரவு படிப்படியாக குறைந்தது.

இதற்கிடையே, சன்னி பிரிவை சேர்ந்த ஹயாத் தஹ்ரீர் அல் ஷாம் (எச்டிஎஸ்) என்ற கிளர்ச்சி குழு வளர்ச்சி அடைந்தது. அல்காய்தா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய இந்த கிளர்ச்சி குழுவுக்கு துருக்கி ஆதரவு அளித்தது. கடந்த நவம்பர் 27ம் தேதி சிரியா ராணுவத்துக்கு எதிராக மிகப் பெரிய போரை எச்டிஎஸ் கிளர்ச்சி படை தொடங்கியது.

கடந்த 1ம் தேதி சிரியாவின் அலெப்போ நகரை கைப் பற்றியது. அடுத்தடுத்து பல் வேறு நகரங்களை கைப்பற்றிய எச்டிஎஸ் படை வீரர்கள், நேற்று சிரியா தலைநகர் டமாஸ்கஸை கைப்பற்றினர். மத்திய வங்கி, அதிபர் மாளிகை, அரசு அலுவ லகங்களில் பணம், பொருட்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. பதற்றம் அதிக மான நிலையில், அதிபர் ஆசாத் வெளிநாட்டுக்கு தப்பி யோடிவிட்டார்.

எச்டிஎஸ் கிளர்ச்சி குழு நேற்று வெளியிட்ட அறிக்கையில், 'ஆசாத் குடும் பத்தின் 50 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. சிறையில் இருந்த கிளர்ச்சி படை வீரர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டமாஸ்கஸில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் கூறும்போது. "இந்திய தூத ரகம் தொடர்ந்து செயல் படு கிறது. சிரியாவில் உள்ள இந்தி யர்களுடன் தொடர்பில் உள் ளோம். அவர்கள் பாதுகாப் பாக உள்ளனர். அவர் களுக்கு தேவையான உதவிகளை தூதரகம் வழங்கும்" என்றனர்.

ரஷ்யாவில் தஞ்சம் புகுந்ததாக தகவல்: சிரியாவில் இருந்து தப்பிய அதிபர் ஆசாத்துக்கு மனைவி, 2 மகன்கள், ஒரு மகள் உள்ள னர். ஆசாத்தின் மனைவி அஸ்மா, பிரிட்டன் தலைநகர் லண்டனை சேர்ந்தவர். சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்த போது, மனைவி, பிள்ளைகள் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்ற நிலையில், ஆசாத் மட்டும் தலைநகர் டமாஸ்கஸில் இருந்தார். கடந்த 7ம் தேதி வரை அவர் அங்கு இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது எங்கு இருக்கிறார் என தெரியவில்லை. சிறப்பு விமானத்தில் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

எச்டிஎஸ் கிளர்ச்சி குழுவின் தலைவர் அல் ஜுலானி யார்? சிரியாவை கைப்பற்றியுள்ள ஹயாத் தஹ்ரிர் அல் ஷாம் (எச்டிஎஸ்) கிளர்ச்சி படையின் தலைவராக இருப்பவர் அபு முகமது அல் ஜுலானி (42). சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் பிறந்தவர். இவரது குடும்பத்தினர் சிரியாவை பூர்வீகமாக கொண் டவர்கள். இவர்கள் வாழ்ந்த பகுதியை இஸ்ரேல் ராணுவம் ஆக்கிரமித்ததால், சவுதி அரேபியாவுக்கு இடம்பெயர்ந்தனர்.


கடந்த 2003ல் ஜுலானி மருத்துவக் கல்வி பயின்று வந்தார். அப்போது இராக்கை, அமெரிக்க ராணுவம் ஆக்கிரமித்ததால், படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, அல் காய்தா தீவிரவாத அமைப்பில் இணைந்தார். இராக்கில் அமெரிக்க ராணுவத்துக்கு எதிராக போரிட்டார். கடந்த 2006ல் அமெரிக்க ராணுவத் தால் கைது செய்யப்பட்டார். 5 ஆண்டு சிறைவாசத்துக்கு பிறகு 2011ல் விடுதலை ஆனதும், ஐஎஸ்ஐஎஸ் தீவிர வாத அமைப்பில் இணைந்து, சிரியா அதிபர் ஆசாத்துக்கு எதிராக போரிட்டார்.

ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் வீழ்ச்சிக்கு பிறகு, ஜபாத் அல் நஸ்ரா என்ற அமைப்பை தொடங்கினார். கடந்த 2017ல் எச்டிஎஸ் கிளர்ச்சி படையுடன் ஜபாத் அல் நஸ்ரா இணைந் தது. இதன்பிறகு எச்டிஎஸ் தலைவரானார். இந்த அமைப் பில் 30 ஆயிரத்துக்கும் மேற் பட்ட வீரர்கள் இருப்பதாக கூறப்படுகிறது. சிரியாவின் புதிய அதிபராக அல் ஜுலானி பதவியேற்கக்கூடும் என்று தெரிகிறது.

## மகளிர் நல திட்டங்களை அறிய அரசின் உதவி எண் அறிவிப்பு

சென்னை , டிச.10

மகளிர் வாழ்வாதார நலத் திட்டங்களை தெரிந்து கொள் வதற்கான உதவி எண்ணை, தமிழக அரசு அறிவித்துள்ளது.



தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வாழ் வாதார இயக்ககங்கள் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் பல்வேறு நலத்திட் டங்கள் மகளிருக்காக செயல் படுத்தப்பட்டு வருகின்றன. அதில் பால்வள மையம், மாத விடாய் சுகாதார மேலாண்மை மன்றங்கள், அறிவுசார் மையங் கள் மூலம் அளிக்கப்படும் பயிற்சிகள், சமுதாய பண் ணைப் பள்ளிகள், சமுதாய திறன் பள்ளிகள் மூலம் வழங் கப்படும் பயிற்சிகள் குறிப்பிடத் தக்கவை.

அதேபோல் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப் படும் கடனுதவிகள், நகர்ப்புற இளைஞர்களுக்காக மத்திய அரசின் கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம், வேலை வாய்ப்பு முகாம்கள், இளைஞர் திறன் விழாக்கள் போன்றவை யும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மகளிர் வாழ் வாதாரம் தொடர்பான வாய்ப்பு கள், நலத்திட்டங்கள், நல உதவிகள் குறித்த வழிகாட்டு தல்களை பெறவும், தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறு வனத்தின் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் வாழ் வாதார உதவி அழைப்பு எண் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பொது அலுவலக வேலை நாட்களில் காலை 9.30 முதல் மாலை 6.30 மணி வரை யில் 155330 என்ற எண்ணை தொடர்பு கொண்டு ஆலோச னைகளை பெற்றுக்கொள் ளலாம்.



கொடைக்கானல் மலைகிராமத்தில் நடைபெற்ற வினோத சேத்தாண்டி திருவிழாவில் ஆயிரக் கணக்கான ஆண்கள் வயது வேறுபாடு இன்றி கலந்து கொண்டு சேற்றை உடம்பில் பூசி கொண்டு கொண்டாட்டம், சேற்றை உடம்பில் பூசி கொண்டனர். இவ்வாறு செய்வது நோய் நொடி இன்றி விவசாயம் செழிக்கும் என்பது கிராம மக்கள் நம்பிக்கையாகும்.

## வேலூரில் நலம் தீபாலயா டிரஸ்ட் சார்பில் சிறந்த செவிலியர்கள் மற்றும் ரத்த தானம் வழங்கிய சிறந்த தன்னார்வ சமூக ஆர்வலர்களுக்கு பாராட்டு விழா

வேலூர் டிச10

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, லட்சுமி கார்டன் பள்ளி அரங்கத்தில், நலம் தீபாலயா டிரஸ்ட் சார்பில் சிறந்த மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ரத்த தானம் வழங்கிய சிறந்த தன்னார்வ சமூக ஆர்வலர்களுக்கு பாராட்டு விழா 2024, சி.எம்.சி. மருத்துவமனை (எமட்டாலஜி) மாற்று மருத்துவ பேராசிரியர் ஜாய் ஜான் மேனன் மற்றும் சி.எம்.சி. மராத்துவமனை (தலைமை) பேராசிரியர் அபி ஆபிரகாம் தலைமையிலும், டிரஸ்டி சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் யசோதா முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக லட்சுமி கார்டன் பள்ளி தாளாளர் டி. ராஜேந்திரன் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஆகியோரை வரவேற்று கௌரவித்து விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் சாதனை




படைத்த மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ரத்த தானம் வழங்கிய தன்னார்வர் சமூக ஆர்வலர்களை பாராட்டி கௌரவித்து கேடயங்களை வழங்கி சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் தலைவர் டி.மோகன்ராஜ், செயலாளர் டி சண்முகசுந்தரம் (எ) பாலு, பொருளாளர் என் லட்சுமணன் மற்றும் உறுப்பினர்கள் பிரிய வந்தனா, லோகேஸ்வரன், ஜெயமங்களாம்பிகை, உமேஷ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

50க்கும் மேற்பட் டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இறுதியில் அரவிந்த் கிருஷ்ணா நன்றியுரையாற்றி விழா நிறைவு பெற்றது. இவ்விழா ஏற்பாடு நலம் தீபாலயா டிரஸ்ட சார்பில் நடத்தப்பட்டது.

## ராமநாதபுரம் அருகே மெத்தபெட்டமைன் போதை பொருள் பறிமுதல்- மூன்று பேர் கைது..!

கீழக்கரை டிச.10

ராமநாதபுரத்தை அடுத்த கீழக்கரையில் மெத்தப் பட்டமைன் போதைப்பொருள் கடத்தப்படுவதாக க்யூப் பிரிவு போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், குற்றவாளிகள் தப்பி விடாத வண்ணம் கீழக்கரை போலீசாருக்கு பிரிவு போலீசார் அளித்த தகவலின் அடிப் படையில் கீழக்கரை போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது அவ்வழியே வந்த காரை நிறுத்தி சோதனை



யிட்டபோது, சந்தேகத்திற்கு இடமான வகையில் முன்னுக்குப் பின் முரணான பதில் அளித்த நபர்கள் சென்ற காரில் தீவிர சோதனை செய்தபோது, காரில் நான்கு கிராம் உயர்ரக போதை பொருளான மெத்தப் பட்டமைன் இருந்ததை கண்டறிந்து பறிமுதல் செய்த போலீசார், காரில் இருந்த கீழக்கரை ஈசா தண்டையார் தெரு பகுதியைச் சேர்ந்த ஜெயினுல் ஆபுதீன், கீழக்கரை நடுத்தெரு பகுதியைச் சேர்ந்த சதாம் உசேன், கீழக்கரை கீழத்தெரு பகுதியைச் சேர்ந்த சையது முகமது ஆகிய மூவரை கைது செய்து கீழக்கரை போலீசார் வழக்குப்பதிந்து சிறையில் அடைத்தனர்.



கன்னியாகுமரி மாவட்டம், அஞ்சுகிராமம் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.




செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் கிண்டி கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு மருத்துவமனை தாம்பரம் ரத்த வங்கி சார்பில் மேற்கு தாம்பரம் திருநீர்மலை சாலை கடப்பேரி பகுதியில் உள்ள ஆதிதிராவிடர் பள்ளியில் ரத்ததான முகாம் நடைபெற்றது முகாமில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் துவங்கி வைத்தார் உடன் காவல் உதவி ஆணையர் சகாதேவன் தாம்பரம் ரத்த வங்கி தலைவர் முருகன் செயலாளர் பிரசன்னா குமார் துணைத் தலைவர் பகவதி உட்பட பலர் கலந்து கொண்டனர்..

# மேடவாக்கம் நா.வேதகிரி தலைமையில் துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா

சோழிங்கநல்லூர் டிச10

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் ஊராட்சியில் நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திமுக அரசின் சாதனை விளக்க பொது கூட்டம் மாலை 6 மணிக்கு மேடவாக்கம் அரசு பள்ளி அருகில் மேடவாக்கம் கிளைக் கழக செயலாளர், செங்கல்பட்டு மாவட்ட கவுன்சிலரமான நா.வேதகிரி தலைமையில் புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் திமுக




அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து தலைமை கழக பேச்சாளர்கள் நெய்வேலி தங்கம் , வீரா.பூவரசன் ,தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் மேடவாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், தலைமை பொதுக் குழு உறுப்பினர், ஒன்றிய கவுன்சிலரமான ப.ரவி, ஒன்றிய குழு தலைவர் சங்கீதா பாரதிராஜன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜே. இ. பாண்டியன், சி. ஊ. ம.தலைவர் எஸ். ரவி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஜெ.டி.மனுநீதி, சமாதானம் நல்லமுத்து, எச்.டி.போஸ், ஒன்றிய பொருளாளர் த.டில்லிபாபு, மாவட்ட பிரதிநிதிகள் கே.குமார், ஆர்.சொக்கலிங்கம், ஜி. எம்.ஏழுமலை, ஓ.இ.அ.து.அமைப்பாளர் என். சரவணன், மே.ஊ.ம.து. தலைவர் எஸ்.கோபு, மா.வி. தொ.அ.து. அமைப்பாளர்கள் ஏ. ஜெயக்குமார், எம்.எஸ். சிவா, மேடவாக்கம் கிளைக் கழக செயலாளர்கள், மேடவாக்கம் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள், கு. வேணுகோபால், பொன் அர்சுணன், எஸ். சுரேஷ், அம்முகிருஷ்ணமூர்த்திகௌரி முருகன் ஜே கமலக்கண்ணன் கே ரவி பி நடராஜன் ஜி கோவிந்தராஜ், பு. தோ.ம .ஒ.இ.அ.து. அமைப்பாளர்கள், ஈ. விஜய், ஓ.கே.எஸ்.சதீஷ், எ.விஜய குமார் என். புவனேஷ் மற்றும் நன்றியுரை மேடவாக்கம் செந்தமிழ் நகர் கிளைச் செயலாளர், டி. பிராங்கிளின், இளைஞர் அணி எஸ்.ராஜ்குமார் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

## மதுரையில் அலன் கேரியர் இன்ஸ்டிடியூட்டின் சோபான் வெற்றி விழா

மதுரை டிச 10

மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் அலன் கேரியர் இன்ஸ்டிடியூட் தனது முதல் சோபான் 2024 வெற்றி விழாவை கோலாகலமாக கொண்டாடியது. சோபான் என்பது கல்வி மற்றும் பிரத்தியேக திறன்களில் சிறந்த சாதனைகளை நிகழ்த்திய மாணவர்களை கௌரவிக்கும் ஆண்டு விழா ஆகும். இதில் 1137 மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். பெற்றோர்கள் தங்களது மகன்கள் மற்றும் மகள்ளும் ஐஐடி, நீட் மற்றும் ஒலிம்பியாட் போன்ற தேர்வுகளில் தகுதி பெற வேண்டும் என்ற கனவோடு இந்த மாபெரும் கொண்டாட்டத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.ஆர். சிவகுமார் ஐபிஎஸ், ஐடோல் விங் சிஜடி சென்னை, நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவர்களை பாராட்டி, அவர்களது சாதனைகள் மேலும் உயர அறிவுரை வழங்கினார். சூர்ய கலா, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை துணை இயக்குநர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, தன் அறிவு மற்றும் அனுபவத்தால் மாணவர்களையும் பெற்றோரையும் ஊக்குவித்தார்.

பேராசிரியர் ஏ.ரத்தினவேல் வேலம்மாள் மருத்துவ கல்லூரியின் முதல்வர், மாணவர்களை பாராட்டி, அவர்களின் கனவுகளை அடைய தன்னுடைய அனுபவங்களில் இருந்து சில முக்கிய அறிவுரைகளை பகிர்ந்து கொண்டார்.




தினேஷ் ஜி, ஜெயப்பிரியா கல்வி குழும இயக்குநர், நெய்வேலி , நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார். விஜய லக்ஷ்மி, குழந்தைகள் உளவியல் நிபுணர், மன நலம் மற்றும் குழந்தைகளின் பரிணாம வளர்ச்சி தொடர்பாக மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் சிறப்பு கருத்தரங்கத்தை வழங்கினார். டாக்டர் செந்தில் குமார், கல்வி குழும பள்ளிகளின் தலைவர், கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசும்போது மாணவர்களின் வளர்ச்சிக்கு அவரது பாராட்டுகளை தெரிவித்தார். சக்தி பிரணேஷ், இயக்குனர், டெல்லி வேர்ல்ட் பப்ளிக் பள்ளி, மதுரை, மாணவர்களைப் பாராட்டி, மாணவர் களுக்குக் கல்வி கற்பித்தல் மற்றும் நிறுவனங்களின் அக்கறை குறித்துப் பேசியதுடன், மாணவர்கள் தங்களது வெற்றியை உறுதிசெய்யும் வழிமுறைகளைப் பகிர்ந்தார்.இந்த சோபான் நிகழ்ச்சியில், மதுரையைச் சேர்ந்த 20 பள்ளிகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 6, 7, 8, 9, 10 மற்றும் 11ம் வகுப்பு படிக்கும் சிறந்த மாணவர்கள் 130 பேருக்கு வெள்ளி பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்ட்து. இந்த மாணவர்கள் அந்தந்த பள்ளி முதல்வர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் ஆவர். மாணவர்களை கௌரவிக்க அவர்களின் பள்ளி முதல்வர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஆற்றிய பங்களிப்பிற்காக பள்ளி முதல்வர்களும் கௌரவிக்கப்பட்டனர்.நிகழ்ச்சியில், அலனின் வருடாந்திர டாலண்டெக்ஸ் தேர்வில், 2024ஆம் ஆண்டு அக்டோபர் 20ஆம் தேதி மதுரை, விருதுநகர், தென்காசி மற்றும் திருநெல்வேலியில் இருந்து 2378 மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்த தேர்வில் வெற்றி பெற்ற சிறந்த 50 மாணவர்கள் வெள்ளி பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டப் பட்டனர். மேலும், மதுரை அலன் பயிற்சி மையத்தில், ஒலிம்பியாட்ஸ், ஐஐடி ஜேஇஇ மற்றும் நீட் (யுஜி) ஆகிய தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களில், ஏப்ரல் முதல் இன்றுவரை நடத்தப்பட்ட அகத் தேர்வில் தொடர்ந்து முதலிடத்தைப் பெற்ற 180 மாணவர்கள் வெள்ளிப் பதக்கங்களுடன் கௌரவிக்கப்பட்டனர். கோவை அலன் பயிற்சி மையத்தில், ஒலிம்பியாட்ஸ், ஐஐடி ஜேஇஇ மற்றும் நீட் (யுஜி) ஆகியவற்றுக்குத் தயாராகும் மாணவர்களில் ஏப்ரல் முதல் இன்றுவரை நடத்தப்பட்ட அகத் தேர்வில் தொடர்ந்து முதலிடத்தைப் பெற்ற 28 மாணவர்கள் வெள்ளிப் பதக்கங்களுடன் கௌரவிக்கப்பட்டனர்.

## மக்கள் நல முன்னேற்ற சங்கம் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச பஸ் பாஸ் அட்டைகளை நிறுவன தலைவர் வழங்கினார்

பெரியகுளம் டிச 10

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள எ. புதுப்பட்டியில் மக்கள் முன்னேற்ற சங்கத்தின் இளைஞர் அணி செயலாளர் இல்ல விழாவில் மக்கள் நல முன்னேற்ற சங்கத்தின் நிறுவன தலைவர் இரா. கணேசன் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

பின்பு தேனி மாவட்ட ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜபாண்டியை சந்தித்து சங்க வளர்ச்சிகளை பற்றி எடுத்துக் கூறினார்.பின்பு வடுகபட்டியைசேர்ந்த மாற்றுத்திறனாளி கணேசன் பலமுறை அரசுக்கு மனு கொடுத்தும் இலவச பஸ் பாஸ் வராத நிலையில் மக்கள் நல முன்



னேற்ற சங்க சார்பில் முயற்சி எடுத்து மாற்று திறனாளிகளுக்கு இலவச பஸ் வழங்கினார்.இந்த நிகழ்ச்சிக்கு நிறுவன தலைவர் இரா. கணேசன் தலைமையிலும் மாநிலச் செயலாளர் சந்திரபாண்டி முன்னிலையிலும் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மகளிர் அணி மாநில ஒருங்கிணைப்பாளர் அபிநயா,மாநில வர்த்தக அணி செயலாளர் மணிகண்டன், பெரியகுளம் ஒன்றிய செயலாளர் வடிவேல், மாவட்ட ஊடகப்பிரிவு செயலாளர் ஆனந்தன், மகளிர் அணி ஒன்றிய செயலாளர் எம். பவானி மாவட்ட தொழிலாளர் அணி செயலாளர் மணிகண்டன், மாவட்ட விவசாய அணி செயலாளர் நாகேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கண்ணன், கம்பம் ஒன்றிய செயலாளர் பிரபாகரன், கம்பம் நகர செயலாளர் சின்னச்சாமி, கம்பம் நகர பொருளாளர் மனோகரன், போடி நகரச் செயலாளர் ராஜ்குமார், கம்பம் ஒன்றிய பொருளாளர் குமரேசன், பெரியகுளம் ஒன்றிய துணைச் செயலாளர்கள் வீரபாண்டி, சீனிவாசன், கம்பம் ஒன்றிய துணைச்செயலாளர் முருகன், வடுகபட்டி பேரூர் செயலாளர் சாத்தாவு பேரூர் துணைச் செயலாளர் கண்ணன் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பாலியல் வன்கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்த கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர்




கன்னியாகுமரி டிச10

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மாவட்ட அளவிலான பாலியல் ஊரக வன்கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, துவக்கி வைத்து தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பெண்கள் வன்கொடுமை, பாலியல் துன்புறுத்துதல், பெண்கள் பாதுகாப்பு போன்ற விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகள் மற்றும் பேரணிகள் 9 வட்டாரங்களில் 94 ஊராட்சிகளில் தமிழ் நாடு மாநில ஊரக வாழ்வா தார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் நேற்று பாலியல் வன்கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வுபேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 'ஒன்றிணைவோம் குரல் கொடுப்போம் வன்முறைக்கு எதிராக'' என்ற கோஷத்துடன் நடைபெற்றது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஆர். அழகுமீனா. தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தலைமையில் பாலியல் வன்கொடுமைக்கு எதிரான உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்

இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, தமிழ்நாடு மகளிர் திட்ட இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் .சா.பத்ஹூ முகம்மது நசீர், உதவி திட்ட அலுவலர்கள், ஒருங்கிணைந்த சேவை மைய பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் மகளிர் திட்ட அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பல்லாவரத்தில் இளைஞரணி சார்பில் மாபெரும் ஒரு நாள் தொடர் இறகு பந்து போட்டி





செங்கல்பட்டு டிச10

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு துணை இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு 8122024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை பழைய பல்லாவரம் ராஜீவ் காந்தி நகர் வேல்ஸ் பள்ளி அருகில் உள்ள இறகு பந்து திடலில் மாபெரும் ஒரு நாள் தொடர் இறகு பந்து போட்டி 2வது மண்டல குழு தலைவர் ஜோசப் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜானகி ராமன் அவர்கள் ஏற்பாட்டில் பல்லாவரத்தில் இருந்து பழைய பல்லாவரம் வரை மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு கழக கொடிகள் அமைத்து நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அருகே கழக கொடி தோரணங்கள் அமைத்து நிகழ்ச்சி வளாகத்திற்குள் கழக அரசின் சாதனைகளை இளந் தலைவரின் பல்வேறு சாதனைகளை விளக்கும் பேனர்கள் அமைத்து பல்லாவரம் பகுதி பகுதி முழுவதும் கழக கொடி தோரணங்களால் விழாக்கோலம் பூண்டிருந்தன.

நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு இறகு பந்து போட்டிகளை விளையாடி தொடங்கி வைத்தார் அப்பொழுது அவர்களுடன் விளையாட்டுவீரர்களும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ ஆகியோர்களும் அடுத்தடுத்து விளையாடி போட்டிகளை தொடங்கி வைத்தனர் மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை அவர்களும் இணைந்து விளையாடினார் அதைத்தொடர்ந்துமாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ..கருணாநிதி எம்.எல்.ஏ, பல்லாவரம் வடக்கு பகுதிகள் செயலாளர் பல்லாவரம் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு உதயாநிதி கோப்பையும் முதல் பரிசாக ரூபாய் 10,000 ஆண்கள் அணி பெண்கள் அணி என இரண்டு அணிகளுக்கு வழங்கப்பட்டது இரண்டாவது பரிசாக உதயநிதி கோப்பையும் ரூபாய் 5000 இதுவும் ஆண்கள் அணி பெண்கள் அணி என இரண்டு அணிகளுக்கு வழங்கப்பட்டது போட்டியில் பங்கேற்றவர்களுக்கு மெடல்கள் வழங்கப்பட்டன இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் திருநீர்மலை த.ஜெயக்குமார், பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் மகளிர் அணி மாணவர் அணி என பலர் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

# சிவகங்கை மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் 44 மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கல்



சிவகங்கை டிச.10

சிவகங்கைமாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொது மக்களிடமிருந்து 413 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் அறிவுறுத்தினார்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,01,800/ வீதம் மொத்தம் ரூ.2,03,600/ மதிப்பீட்டிலான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் களையும், 01 மாற்றுத் திறனாளிக்கு ரூ.1,14,400/ மதிப்பீட்டிலான பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலியினையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.6,840/ மதிப்பீட்டிலான மோட்டார் பொருத்திய தையல் இயந்திரத்தினையும், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.13,200/ வீதம் மொத்தம் ரூ.26,400/ மதிப்பீட்டிலான நவீன வாசிக்கும் கருவிகளையும் (Modular Reading Device), 03 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.9,050/ வீதம் மொத்தம் ரூ.27,150/ மதிப்பீட்டிலான மூன்று சக்கர சைக்கிள்களையும், 24 மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.2,780/ வீதம் மொத்தம் ரூ.66,720/ மதிப்பீட்டிலான காதொலி கருவிகளையும், 03 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,636/ வீதம் மொத்தம் ரூ.4,908/ மதிப்பீட்டிலான பிரெய்லி கைகடிகாரங்களையும், 01 மாற்றுத் திறனாளிக்கு ரூ.303/ மதிப்பீட்டிலான மடக்கு ஊன்று கோலினையும், 03 மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.16,199/ வீதம் மொத்தம் ரூ.48,597/ மதிப்பீட்டிலான தக்க செயலியுடன் கூடிய திறன் பேசிகளையும், 03 மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.3,550/ வீதம் மொத்தம் ரூ.10,650/ மதிப்பீட்டிலான நவீன மடக்கு ஊன்றுகோல்களையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.730/ மதிப்பீட்டிலான தோள் தாங்கியினையும் என ஆக மொத்தம் 44 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5,10,298/ மதிப்பீட்டிலான பல்வேறு வகையான உதவி உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பகுதி பொம்மன்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு அரணாக செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையம்



மதுரை டிச 10

தமிழ்நாடு அரசின் நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சாகுபடி நடைபெறும் காலங்களில் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல்லினை கொள்முதல் செய்கிற வகையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அரசு சார்பில் திறக்கப்படுகிறது.இதற்காகவே பட்டியல் எழுத்தர்கள் உதவியாளர்கள் காவலர் கள் அரசின் சார்பில் நியமிக்கப் படுகிறன்றனர்.

அந்த வகையில் விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக நிகழக்கூடிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மேலாளர் முருகேசன்,துணை மேலாளர் திருமுருகச்செல்வம் ஆகியோர் வழிகாட்டுதலில் சிறப்பான செயல்பாட்டை நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செய்து வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி பொம்மன்பட்டி பகுதி விவசாயி ஒருவரிடம் கேட்ட போது,எப்போது விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மட்டுமே நம்பி செயல்படுவதாகவும் ,பொம்மன்பட்டியில் விவசாயிகளுக்கு அரணாக செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்படுவதாகவும் தெரிவித்தார் .இதே போன்று கரட்டுப்பட்டி,மாங்குளம்,பெருசுப்பட்டி,மாத்தூர்,நாச்சிகுளம்,கட்டக்குளம்,கல்வேலிபட்டி,போடி நாயக்கன் பட்டி,ஆண்டிபட்டி,தனிச்சியம், முள்ளிப்பள்ளம்,கள்ளந்திரி ,பண்ணைக்குடி,இரும்பாடி ஆகிய ஊர்களில் விவசாயிகளின் பெரும் ஆதரவை பெற்று நெல் கொள்முதல் நிலையங்கள் சிறப்பான செயல்பாட்டை தந்துள்ளனர். ஒரு ஏக்கர் விவசாயம் செய்திட 25000 ரூபாய் செலவு செய்து 30 மூடைகள் வரை தான் எடுத்தாலும் கூட அவற்றை நம்பகமாக விற்கும் இடமாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திகழ்வதாகவும்,இந்த ஆண்டு பருவ மழை தவறியதால் விளைச்சல் குறைவாக உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர் .

# பள்ளி மாணவர்களுக்கான நிழற்குடையை திறந்து வைத்த கீழவடகரை ஊராட்சி மன்ற தலைவர்








பெரியகுளம் டிச10

தேனிமாவட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழவடகரை ஊராட்சி ஸ்டேட் பாங்க் காலணி நுழைவு வாயில் பகுதியில் ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூபாய் 2.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பள்ளி மாணவர்களுக்கான நிழற்குடை திறப்பு விழா நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் செல்வராணி செல்வராஜ் புதிய நிழற்குடையை திறந்து வைத்து மரக்கன்று களை நட்டு வைத்தார்.இந்நிகழ்வில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜசேகர், வார்டு உறுப்பினர்கள் கிருஷ்ணவேணி குணசேகரன், கனவள்ளி துரைப்பாண்டி, மகாலிங்கம், ராசாத்தி, ஊராட்சி செயலர் லெனின், கழக உடன்பிறப்புகள், பொது மக்கள் உட்பட ஏராள மானோர் கலந்து கொண்டனர்.

# கவலைக்கிடமான கார்சேரி ஊராட்சி

## கடந்த 5 ஆண்டுகளாக எந்த மக்கள் நலத்திட்ட பணிகளும் முறையாக நிறைவேற்றப்படாததால் கொந்தளிக்கும் பொதுமக்கள்!









மதுரை டிச 10

மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமம் தான் கார்சேரி. இங்கு 4975 வாக்காளர்கள் உள்ளனர்.இங்கு பல்வேறு வாக்குறுதிகளை தந்து ஊராட்சி மன்ற தேர்தலில் வெற்றி பெற்ற பாண்டீஸ்வரி இளவரசன் முறையாக மக்கள் நல திட்டப்பணிகளை நிறைவேற்றாததால் பொது மக்கள் கொந்தளிக்கும் மன நிலையில் உள்ளனர். இங்குள்ள கிழக்கு தெரு பகுதியில் குடிநீர் தொட்டி இடிந்து விழக்கூடிய சூழ் நிலையில் உள்ளதோடு அருகில் இருக்கும் குழாயில் அழுத்த குறைபாடு காரணமாக ஒரு குடம் தண்ணீரை பிடிக்க சுமார் 1 மணி நேரம் செலவிடுவதாக வேதனையோடு தெரிவிக்கின்றனர் இப்பகுதி பெண்கள்.மேலும் இதே ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் சுமார் 40 லட்சம் மதிப்பீட்டில் 368 தனி நபர்களுக்கு குழாய் அமைத்து தண்ணீர் வசதி அளித்துள்ளதாக கல் வெட்டு வைத்துள்ள நிலையில் அந்த குழாய்களில் காற்று கூட வருவதில்லை எனச்சொல்கின்றனர் சௌராஷ்டிரா காலனி பொதுமக்கள்.மேலும் இஸ்லாமிய மக்கள் அதிகம் வசிக்கும் மதினா பள்ளிவாசல் பகுதிக்கு சாலை அமைத்து தருவதாக கூறியதோடு சரி இதுவரை அந்தப்பணிக்காக சிறிய கல்லை கூட ஊராட்சி தலைவர் நகர்த்தவில்லை என்கின்றனர்.கண்மாய் கரையை ஒட்டியுள்ள புதிய சுடுகாடு இன்னும் பயன் பாட்டிற்கு வராத சூழ்நிலையில் பழைய சுடுகாட்டில் விளக்கு மற்றும் குடிநீர் மற்றும் தொட்டி வசதி கூட செய்து தரப்பட வில்லை.இந்த நிலையில் எதிர் வரக்கூடிய உள்ளாட்சி மன்ற தேர்தல் கார்சேரி ஊராட்சியில் ஆளும் கட்சிக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்றே கருதப்படுகிறது.பொய்யான வாக்குறுதிகளை தந்து வெற்றி பெற்று விட்டு தங்களை ஊராட்சி மன்ற தலைவர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கார்சேரி பொது மக்களைமறந்து போய் விடுவதாக கொந்தளிக்கின்றனர்





# தமிழக வெற்றிக் கழக தேனி வர்த்தக அணி சார்பாக இலவச கண் பரிசோதனை முகாம்



தேனி டிச10

தேனி மாவட்டம் சமதர்மபுரத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் நல்லாசியுடன் தேனி மாவட்ட வர்த்தக அணி சார்பாக மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இந்த விழாவில் தமிழக வெற்றி கழகத்தின் மாவட்ட தலைவர் டாக்டர் லெஃப்ட் பாண்டி தலைமை தாங்கினார்.வர்த்தக அணி மாவட்ட தலைவர் தாஸ் முன்னிலை வகித்தார்.வர்த்தக அணி து.தலைவர் கௌதம், செயலாளர் கருப்பசாமி வர்த்தக அணியின் நிர்வாகிகள் மற்றும் வர்த்தக அணி உறுப்பினர்கள் ஒத்துழைப்பிலும் இந்த மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இலவச கண் பரிசோதனை முகாமில் சுமார் 600க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர், மேலும் 150 க்கும் மேற்பட்டோர்க்கு இலவச கண் கண்ணாடி வழங்கப்பட்டது.

முகாமில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் தலைவர் விஜய்யை வாழ்த்தியும், வர்த்தக அணியினரை பாராட்டியும் சென்றனர்.

# ஆயக்குடியில் துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு கபாடி போட்டி பரிசளிப்பு விழா..



பழனி டிச10

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த பழைய ஆயக்குடி பாரதி கலையரங்கத்தில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவரணி சார்பாக தொடர் கபாடி போட்டி நடைபெற்றன.

இந்த போட்டியை பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில்குமார் விளையாட்டு வீரர்களுக்கு கை கொடுத்து ஆட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்நிலையில் 40 அணிகளுக்கு மேல் கபாடி போட்டியில் கலந்து கொண்டு விளையாடினர். தொடர்ந்து ஆட்ட முடிவில் முதல் பரிசான 50,000 ரூபாய் மற்றும் அதற்கு இணையான சுழற்கோப்பையை பழனி தமிழ்நாடு சிறப்பு காவல்துறை அணியினர தட்டிச் சென்றனர்.

மேலும் இரண்டாம் பரிசான 40,000 ரூபாய் பணமும் அதற்கு இணையான சுழற் கோப்பையும் திண்டுக்கல் நகரை சேர்ந்த மாகாளியம்மன் ஸ்போர்ட்ஸ் கிளப் அணியினர் தட்டிச் சென்றனர்.

மேலும் மூன்றாம் பரிசான 30,000 ரூபாய் பணமும் அதற்கு இணையான சுழற் கோப்பையையும் திண்டுக்கல் ஜி டி என் ஸ்போர்ட்ஸ் கிளப் அணியினர் தட்டிச் சென்றனர். நான்காம் பரிசான 20000 ரூபாய் பணமும் அதற்கு இணையான சுழற்கோப்பையையும் செட்டியூர் ABNC அணியினர் தட்டிச் சென்றனர்.

மேலும் இந்நிகழ்வில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகர் ஆயக்குடி பேரூர் செயலாளர் சின்னத்துரை ஒன்றிய செயலாளர்களான சாமிநாதன், சௌந்தரபாண்டி ஆய்குடி பேரூராட்சி தலைவர் மேனகா ஆனந்தன் துணை தலைவர் சுதாமணி கார்த்திகேயன் இளைஞர் அணி அமைப்பாளர் லோகநாதன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு பரிசளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

# பெரியகுளம் நகர் காங்கிரஸ் சார்பில் சோனியா காந்தி பிறந்தநாள் விழா



பெரியகுளம் டிச10

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் நகர் காங்கிரஸ் சார்பில் முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் மனைவியும், காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவருமான சோனியா காந்தி அவர்களின் 78 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

சோனியா காந்தியின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு பெரியகுளம் மூன்றாந்தல் பகுதியில் உள்ள காந்தி சிலைக்கு பெரியகுளம் நகர் காங்கிரஸ் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் சோனியா காந்தி பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. பெரியகுளம் நகர் காங்கிரஸ் தலைவர் கனக சிதா முரளி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல தலைவர் பிச்சை, செயலாளர் ஆசிரியர் அசோகன், மாவட்ட இலக்கிய அணி தலைவர் ஏ. சி. சிவபாலு, நகர செயலாளர் வீராச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் முத்துப்பாண்டி, நகர துணை தலைவர் ஜான்பா, வார்டு உறுப்பினர்கள், கமலக்கண்ணன் மற்றும் நிர்வாகிகள் நகர் காங்கிரஸ் பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# போதை பொருள்களை பயன்படுத்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு நெடுந்தூர ஓட்டப் போட்டி சிவகங்கை ஆட்சியர் தகவல்



சிவகங்கை டிச.10

தமிழகம் முழுவதும் போதை பொருள்கள் ஒழிப்பு குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தவகையில், பள்ளி / கல்லூரி மாணவ/ மாணவியர்கள் மற்றும் பொதுமக்களிடையே "மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுவதற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்துடன் போதை பொருள்களை தவறான பயன்பாட்டிற்கு பயன்படுத்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் சார்பில், வருகின்ற 14.12.2024 அன்று காலை 5.30 மணிக்கு நெடுந்தூர ஓட்டப் போட்டி (Mararthon) சிவகங்கையில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ள பள்ளி/ கல்லூரிகளில் நேரடியாக பயிலும் 14 – வயதிற்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் தாங்கள் பயிலும் கல்வி நிலையம் மூலம் பதிவு செய்திடல் வேண்டும். 18 முதல் 30 வயது வரை வயதுடைய தன்னார்வலர்கள் அனைவரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். இந்நெடுந்தூர ஓட்டப் போட்டியானது (Marathon) இருபாலருக்கும் 5 கி.மீ தொலைவில் நடைபெறவுள்ள போட்டியாகும்.

மேலும், இப்போட்டியில் கலந்து கொள்ளும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவிகள், தங்கள் கல்வி நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டையினையும், கல்வி நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரினையும் தெரிவித்திடல் வேண்டும். தன்னார்வலர்கள் தங்களது வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஓட்டுநர் உரிம அட்டை ஆகியவற்றினை சமர்ப்பிப்பதுடன், தங்களது சுயமின்னஞ்சல் முகவரியினையும் தெரிவித்திடல் வேண்டும்.

இப்போட்டியானது, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி, திருப்பத்தூர் சாலை, கோர்ட் வாசல், சிவகங்கை தாலுகா அலுவலகம், லிமிசி, புதிய நீதிமன்றம், மகளிர் கல்லூரி, மற்றும் திருப்பத்தூர் சாலை வழியாக மாவட்ட ஆட்சியர் அலுவலக உள்வட்டபாதையில் மின்வாரிய அலுவலகம் வழியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பிரதான கட்டிட வாசல் முன்பு நிறைவடையும் வகையில், மொத்தம் சுமார் 5 கிலோமீட்டர் தூரம் இப்போட்டியானது நடைபெறவுள்ளது.

மேலும், இப்போட்டியில் கலந்துகொண்டு முதல் மூன்று இடங்களில் வரும் நபர்களுக்கு பதக்கம் (medal) கேடயம், பாராட்டுச் சான்றிதழ், 14 18 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 1830 வயதிற்குட்பட்டவர்களுக்கான ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவினருக்கு முதல் பரிசாக ரூ.10,000/-மும், இரண்டாம் பரிசாக ரூ.7,000/-மும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/-மும் மற்றும் ஆறுதல் பரிசாக ரூ.1,000/-மும் ரொக்கத்தொகையாக வழங்கப்படும். அதுமட்டுமன்றி, போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் Appreciation Certificate வழங்கப்படும்.

எனவே, போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்களது பெயரினை https;// sivaganga.nic.in/ என்ற தரவுத்தளத்தில் (Online Portal) ல் வருகின்ற 12.12.2024 அன்று மாலை 5.00 மணிக்குள் பதிவு செய்திடல் வேண்டும். அவ்வாறு, பதிவு செய்ய இயலாதவர்கள் போட்டி நாளான 14.12.2024 அன்று காலை 05.00 மணிக்கு முன்னதாக வருகைபுரிந்து பதிவு செய்து, தங்களின் வருகையை உறுதிசெய்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வேதியரேந்தல் , செங்கோட்டை காலணி பகுதியில் 120 ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்தவர்கள் வசித்து வருகின்றனர் இப்பகுதிக்கு அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டி செங்கோட்டை காலனி பகுதியைச் சேர்ந்த பெண்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் நேற்று மனு அளித்துள்ளனர்..

# கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



கன்னியாகுமரி டிச.10

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 460 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர். அழகுமீனா, துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செந்தில் வேல்முருகன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) .சேக் அப்துல்காதர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





சிவகங்கை மாவட்டம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் நடைபெற உள்ள பாதுகாப்பு தின விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து நேற்று துவக்கி வைத்தார்.இந்த நிகழ்ச்சியில் பள்ளி கல்லூரி மாணவர்கள் குடிமக்கள் நுகர்வோர் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



தென்காசி டிச10

தென்காசி மாவட்ட ஆட்சி யரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (09.12.2024) மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டார்.

மேலும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மூலம் 03 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.08,500/ வீதம் என மொத்தம் ரூ.25,500/ மதிப்பிலான பிரெய்லி ரீடர்கள் மற்றும் 03 மாற்றுத்திறனாளிகளுக்கு பாதுகாவலர் நியமன சான்றுகளையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 41 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.4.58 கோடி மதிப்பிலான கடனுதவிக்கான காசோலைகளையும் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், வழங்கினார்.

தொடர்ந்து, இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 645 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வக்குமார், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஷேக் அயூப், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மதி இந்திரா பிரியதர்ஷினி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயப்பிரகாஷ் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவை களப்பணியாளார்கள் 9 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி சிவகங்கை மாவட்ட தலைவர் கோ.வேல்முருகன் தலைமையில் மாவட்ட செயலாளர் க.கார்த்தி முன்னிலையில் நேற்று 09.12.2024 சிவகங்கை மாவட்ட முழுவதும் 9 வட்டாட்சியர் அலுவலங்களில் உள்ளிருப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது. அனைத்து களப்பணியாளர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS" No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161